2002 ஏப்ரல் 2]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலக அளவில் எடுத்துக்கொண்டால், அதிகமாக பழம் உற்பத்தி செய்யக்கூடிய நாடு இந்தியாதான். ஆனால், ஏற்றுமதி என்று எடுத்துக்கொண்டால், ஒரு சதவீதம் அளவிற்குத்தான் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு நமது ஏற்றுமதி நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், நாம் தயாரிக்கின்ற அந்தப் பழங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு தரத்தை உயர்த்தி தயார் செய்யப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தேனி போன்ற பகுதிகளிலே திராட்சைப் பழங்கள் அதிகமாக விளைகின்றன. அங்கே தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அதை அரசு பரிசீலிக்கும், சிந்திக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, சப்போட்டா, தக்காளி, மாங்காய், திராட்சை போன்ற பழங்கள் அதிகமாக விளைகின்றன. சென்ற ஆட்சியிலே அவற்றையெல்லாம் சேமித்து வைப்பதற்காக குளிர்சாதனக் கிடங்கு அமைக்க Agriculture Marketing Committee மூலமாக 3½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இன்னும் அந்தப் பணி ஒட்டன்சத்திரத்திலே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு குளிர் சாதனக் கிடங்கு அமைப்பதற்கு முன் வருவார்களா, வேலையை விரைவாக செய்வதற்கு உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 2

63—

விதைப் பண்ணை

*8715—**திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றிய விவசாய விதைப் பண்ணை திருப்பத்தூரில் உள்ளதால், கந்திலியில் விதைப் பண்ணையை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றிய விவசாய விதைப் பண்ணை திருப்பத்தூரில் உள்ளதால், கந்திலியில் விவசாய விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. எஸ். நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள, கந்திலி ஊராட்சி ஒன்றியம், 39 சிற்றூராட்சிகளைக் கொண்ட ஒன்றியம். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் வசித்து வரும் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட விவசாய விதைக் கிடங்கு, திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட திருப்பத்தூர் நகராட்சியில் இருந்து வருவதால், விவசாயப் பெருமக்கள் விதைகளை வாங்கிச் செல்ல அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த விதைப் பண்ணையை கந்திலி ஊராட்சி ஒன்றியத்தின் மையப் பகுதியான கொரட்டி ஊராட்சியில் அமைத்துத் தர மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என உங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆய்வு இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 64, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*